**த. நா.ச.பே. எண் : 002** **நாள் : 13.03.2020**

# சட்டப் பேரவை விதி 110ன் கீழ்
# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிவிப்பு – 13.3.2020

## சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**வனத் துறையின்** சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன் :-

1. சென்னை **வேளச்சேரியில், புதிதாக கட்டப்படுகின்ற வனத் துறை தலைமை அலுவலக** கட்டடங்களுக்கு மின் சாதனங்கள், மேஜை நாற்காலி, கண்காணிப்பு கேமரா அமைத்தல் போன்ற **உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 22 கோடியே 75 லட்சம் ரூபாய் இந்த நிதியாண்டில் ஒதுக்கித் தரப்படும்.**
2. **வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில்** வன உயிரினங்களை மிக அருகில் காணும் வகையில், '**விலங்குகள் உலாவிட உலகம்**' **11 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**
3. திண்டுக்கல் சிறுமலை காப்புக்காடு, அழிந்துவரும் தேவாங்கு இனத்தின் பிறப்பிடமாக உள்ளதால்,

தேவாங்கைப் பாதுகாக்கவும், காட்டு மாடு, கடமான், சாம்பல் நிற கரடி, ஆசிய புனுகுப் பூனை, காட்டுப் பூனை, ஆகியவற்றுடன், வங்கப் புலி, புள்ளிமான், சதுப்பு நில முதலை, மயில், வெளிமான், நெருப்புக் கோழி, இந்திய மலைப் பாம்பு, சாரைப் பாம்பு, நல்ல பாம்பு, மலேசிய மலைப் பாம்பு, குள்ளநரி, வங்க நரி ஆகியவை கொண்டு வரப்பட்டு, அவ்விலங்குகளுக்கு இருப்பிடங்கள், மருத்துவ வசதிகள், உணவு வழங்கும் இடம், தீவனத் தோட்டம், பூங்கா மற்றும் பார்வையாளர் வசதி ஆகியவை கொண்ட '**சிறு வன உயிரின பூங்கா**' 40 ஹெக்டேர் பரப்பளவில் **10 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

4. **சேலம், குரும்பப்பட்டியில்** உள்ள சிறு வன உயிரினப் பூங்கா, '**நடுத்தர வன உயிரினப் பூங்கா**'வாக தரம் உயர்த்தப்படும். இதற்காக, கூடுதல் வன உயிரினங்கள் கொண்டு வரப்பட்டு, அவற்றுக்கான இருப்பிடங்கள், மருத்துவ வசதிகள், உணவு சேமிப்பு அறை, கருத்து விளக்க மையம் மற்றும் நடைபாதை போன்ற **அத்தியாவசிய வசதிகள் 8 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

5. இயற்கை மற்றும் மனிதர்களால் **வனங்களில் ஏற்படும் தீ விபத்துகளைத் தடுத்து,** வன விலங்குகள் வனத்தில்

இருந்து வெளிவரா வண்ணம் பாதுகாக்கும் பொருட்டு, **23 கோடியே 26 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பு வனக்காவல் பணியமைப்பு மற்றும் தீத்தடுப்பு அதிரடிப்படை உருவாக்கி, அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படும்.**

6. **யானைகள் காடுகளை விட்டு வெளியேறுவதால்,** மனித உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றன. இதனைத் **தடுக்கும் பொருட்டு, தர்மபுரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் எஃகு கம்பிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் தூண்களை நிறுவி, 5 அடுக்கு கம்பிவேலிகள் 60 கி.மீ. தூரத்திற்கு 21 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், **சுற்றுச்சூழல் துறை** மூலம் கீழ்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. நடப்பு நிதி ஆண்டில், **நாமக்கல், ராமநாதபுரம் மற்றும் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு சுமார் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

2. ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் ஒன்றியம், மொடச்சூர் ஊராட்சி, **இந்திரா நகரில் உள்ள செங்குட்டை ஏரியிலும், கோபிசெட்டிபாளையம் ஒன்றியம், குள்ளம்பாளையம் ஊராட்சியில் உள்ள வண்ணான்குட்டை ஏரியிலும்** பாதுகாப்பு சுவருடன் கூடிய நடைபாதை, படகு இல்லம், மின் விளக்குகள், சிறுவர் பூங்கா மற்றும் காட்சி கோபுரம் அமைக்கும் பணிகள், **சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

3. திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகராட்சியில், சுமார் 7 ஏக்கர் 76 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள சூரியகுளத்தில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க தனியாக ஒரு கழிவு நீர் கால்வாய் ஏற்படுத்தவும், குளத்தினை தூர்வாரி நீர் கொள்ளளவினை அதிகரிக்கவும், கரையினை பலப்படுத்தி பாதுகாப்பு வேலி மற்றும் மின் விளக்குகள் அமைக்கவும், சுமார் 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பள்ளிக் கல்வித் துறை

1. வரும் கல்வி ஆண்டில், **5 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவில் 25 புதிய அரசு தொடக்கப் பள்ளிகள் துவங்கப்படும்.**

**மேலும், 10 அரசு தொடக்கப் பள்ளிகள் 3 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.** இப்பள்ளிகளுக்கு தேவைப்படும் **3** கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும். மேலும், தேவைப்படும் ஆசிரியர் பணியிடங்கள் பணி நிரவல் மூலம் நிரப்பப்படும்.

**2.** வரும் கல்வியாண்டில் **15 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.** இப்பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் **26 கோடியே 25 லட்சம் ரூபாய்** செலவில் செய்து கொடுப்பதுடன், தேவையான கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் **9 கோடியே 87 லட்சம் ரூபாய்** செலவில் ஏற்படுத்தப்படும்.

**3. 30 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.** இப்பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் **55 கோடியே 50 லட்சம் ரூபாய்** செலவிலும் தேவையான கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் **21 கோடியே 36 லட்சம் ரூபாய்** செலவிலும் ஏற்படுத்தப்படும்.

**4.** அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், தமிழ்நாட்டில் முதற்கட்டமாக, **1,890** அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், கண்காணிப்பு கேமரா பொருத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும்

கல்வியாண்டில் மீதமுள்ள **4,282 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 48 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமரா வசதி அமைத்து தரப்படும்.**

5. அரசு பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, பள்ளிக் கட்டடங்கள் மற்றும் அலுவலகங்களை பராமரிப்பதற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் **பராமரிப்பு மற்றும் செப்பனிடுதல் பணிகளுக்கான மானியத் தொகை 38 கோடியே 50 லட்சம் ரூபாயில் இருந்து 2020–21ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்** சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. திருப்பூர் மாவட்டத்தில் தடகளம், கூடைப்பந்து, கையுந்து பந்து மற்றும் இதர விளையாட்டுகளுக்கான வசதிகளும், பார்வையாளர் மாடத்துடன் கூடிய ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம் கொண்ட புதிய மாவட்ட விளையாட்டு வளாகம், **18** கோடி ரூபாய் செலவில் அமைத்துத் தரப்படும்.

2. நமது மாநிலத்தில் கண்டறியப்பட்ட திறமையான விளையாட்டு வீரர்களின் திறன்களை மேலும் மேம்படுத்தி, அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான பதக்கங்களை வெல்வதற்கு ஏதுவாக ஆறு உயர் செயல்திறன் அகாடமிகள் ஏற்படுத்தப்படும். தடகளம், கையுந்து பந்து, கால்பந்து மற்றும் கூடைப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கிலும், வளைகோல் பந்து விளையாட்டுக்கு மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கிலும், நீச்சல் விளையாட்டுக்கு வேளச்சேரி நீச்சல் குள வளாகத்திலும் இந்த உயர் செயல்திறன் அகாடமிகள், 3.89 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

3. உள்ளரங்க விளையாட்டுகளில் வீரர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், கேரம், டேக்வாண்டோ, ஜுடோ, வாள் சண்டை, பிரிட்ஜ் மற்றும் இதர உள்ளரங்க விளையாட்டுகளுக்கான மாநில அளவிலான ஒரு பயிற்சி மையம், 12.30 கோடி ரூபாய் செலவில் 5 தளங்களைக் கொண்ட விளையாட்டு வளாகம், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

உயர் கல்வித் துறை மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இத்துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. தமிழ்நாட்டில் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரி மற்றும் 45 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள **கட்டடங்களை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும், முதல்கட்டமாக இந்த ஆண்டு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**
2. பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்யப்படும் 10 ஆயிரம் மாணாக்கர்கள், தொழிலகங்களில் கள அனுபவம் பெற்று, தங்கள் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திக் கொள்ள **ஒரு மாணாக்கருக்கு 16 ஆயிரத்து 600 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்க, 16 கோடியே 60 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**
3. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், உயர் மின் அழுத்த பகிர்மான அமைப்பை சிறப்பான முறையில் இயக்கி

பராமரிக்க, **6.33 கோடி ரூபாய் தொடர் செலவினத்தில், 61 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.**

4. ஆசியாவிலேயே முதன்முதலாக துவங்கப்பட்ட பெருமைக்குரிய, சென்னை, சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டடம் 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. **இப்புராதனக் கட்டடத்தினை, அதன் தொன்மை மாறாமல் புனரமைக்க, 10.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**
5. அதே போன்று, **1840**ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தேசிய கல்லூரிகள் கட்டமைப்பில், நாட்டிலேயே **3**ஆம் இடத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த **சென்னை, மாநிலக் கல்லூரியின் பழமை வாய்ந்த பல கட்டடங்களும், கல்லூரி முதல்வர் குடியிருப்பும், அதன் தொன்மை மற்றும் அழகு மாறாமல், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து பாதுகாக்கப்படும்.**
6. **பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணாக்கர்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தும் வகையில்,** மின் வாகனங்கள் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்காக அண்ணா பல்கலைக்கழகத்திற்கும், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான ஆராய்ச்சிக்காக அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கும், சுகாதாரம் மற்றும் ஆற்றல் தொடர்பான ஆராய்ச்சிக்காக பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கும்,

புற்றுநோய் ஆராய்ச்சிக்காக பாரதியார் பல்கலைக் கழகத்திற்கும், உயிர் மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சிக்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கும், உயிர் மருத்துவ பயன்பாடுகள் குறித்த ஆராய்ச்சிக்காக சென்னை பல்கலைக்கழகத்திற்கும் **தலா 35 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 210 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.**

7. ஆண்டுதோறும் உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், **அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டவும், கணினி மற்றும் உபகரணங்கள் மற்றும் மர தளவாடங்கள் வாங்கவும் 150 கோடி ரூபாய் வழங்கப்படும்** என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**